

கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட தி.மு.க.விற்கு உட்பட்ட அனைத்து ஒன்றியங்களிலும் 100 நாள் வேலை உறுதி திட்டத்தின் (MGNREGA) மூலம் தமிழ்நாட்டிற்கு தர வேண்டிய ரூ. 4034 கோடி நிதியை வழங்காமல் தமிழ்நாட்டை தொடர்ச்சியாக வஞ்சித்து வரும் ஒன்றிய பா.ஜ.க. அரசை எதிர்த்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் அகஸ்தீஸ்வரம் வடக்கு ஒன்றியத்தில் ஒன்றிய செயலாளர் எம்.மதியழகன் தலைமையில், மைலாடி சந்திப்பு பகுதியில் மற்றும் அகஸ்தீஸ்வரம் தெற்கு ஒன்றியத்தில் ஒன்றிய செயலாளர் பா.பாபு தலைமையில், கொட்டாரம் சந்திப்பு, தபால் நிலையம் எதிரில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் மாவட்டச் செயலாளர், மேயர் ரெ.மகேஷ் கலந்து கொண்டு ஆர்ப்பாட்டத்தை துவக்கி வைத்து ஒன்றிய பா.ஜ.க. அரசை எதிர்த்து கண்டன கோஷங்களை முழங்கினார்.





கழக இளைஞர் அணி செயலாளர் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவிப்புக்கு இணங்க மதுரை வடக்கு மாவட்டம் மேலூர் தொகுதி தி.மு.க. இளைஞரணி சார்பாக ஒன்றிய பாசிச பா.ஜ.க. அரசைக் கண்டித்து மேலூரில் மாவட்ட செயலாளர், வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி தலைமையில் நடைபெற்ற மாபெரும் கண்டன பொதுக்கூட்டத்தில் கழக கொள்கை பரப்புச் செயலாளர் திருச்சி என்.சிவா எம்.பி., கண்டன உரையாற்றினார். உடன் மாவட்ட துணைச் செயலாளர் ஆ.வெங்கடேசன் எம்.எல்.ஏ., கழக இளைஞரணி மாநில துணைச் செயலாளர் ஜி.பி.ராஜா, இளம் பேச்சாளர் இதயப்பிறவி பிரசாந்த், கழக நிர்வாகிகள் எம்.ஆர்.எம். பாலசுப்பிரமணியம், எம்.சோமசுந்தர பாண்டியன், எம்.இளங்கோ, முகமது யாசின், நேருபாண்டியன், அக்ரி கணேசன், சிறைச்செல்வன், குமரன், ராஜராஜன், பிரபு, பரவை அன்புச்செல்வன், குமரேசன், வெற்றிச்செல்வன், அய்யனார், மதுரை பாலா, மருதுபாண்டியன் மற்றும் திரளான கழக நிர்வாகிகள், கழகத்தினர், இளைஞர் அணியினர், பொதுமக்கள் பங்கேற்றனர்.

### தமிழ்நாட்டில் நாடாளுமன்றத் தொகுதி மறு வரையறை;

# மக்கள் தொகை அடிப்படையில் செய்தால் எம்.பி.க்கள் எண்ணிக்கை குறையும்!

## தேனியில் தங்கதமிழ்ச்செல்வன் எம்.பி. பேட்டி!

தேனி, ஏப். 1 -

தேனி தி.மு.க வடக்கு மாவட்டச் செயலாளர் தங்க தமிழ்ச்செல்வன் எம்.பி., செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில் கூறுகையில்,



இந்தியாவில் மக்கள் தொகை அடிப்படையிலான நாடாளுமன்ற தொகுதி மறு வரையறை என்பதில் தமிழகத்தில் 1971ம் ஆண்டு மக்கள் தொகை அடிப்படையில் மறுவரையறை செய்தால் எம்.பி.க்கள் எண்ணிக்கை கூடும். ஆனால் தற்போதைய மக்கள் தொகை அடிப்படையில் மறு வரையறை செய்தால் எம்.பி.க்கள் எண்ணிக்கை குறையும். அதனால் தான் தி.மு.க வாதம் செய்து வருகிறது. இந்த மறுவரையறை விவகாரத்தில் பிரதமரோ, உள்துறை அமைச்சர் அமித்ஷாவோ நாடாளுமன்றத்தில் பதில் கூற வேண்டியது தானே. ஏன் பேசவில்லை. ஜனநாயக முறைப்படி தான் நடக்கும் என கூறலாமே.

தென் மாநில கூட்டு நடவடிக்கை குழுவில் தமிழ்நாடு, தெலுங்கானா, பஞ்சாப், ஒடிசா, பஞ்சாப் போன்ற மாநிலங்களில் இடம் பெற்றுள்ளன. இதில் தற்போதைய மக்கள் தொகை விகிதாச்சாரப்படி பாதிக்கப்படக்கூடிய மாநிலங்களுக்கு 1971ம் ஆண்டு மக்கள் தொகை அடிப்படையிலே மறுவரையறை செய்யலாம். அன்றைய காலகட்டத்தில் வட மாநிலங்களிலும், தென் மாநிலங்களிலும் மக்கள் தொகை விகிதாச்சாரம் ஒரே அளவில் இருந்தது. தற்போது தென் மாநிலங்களை விட, வட மாநிலங்களில் மக்கள் தொகை அதிகமாக இருப்பதால் தற்போதைய மக்கள் தொகை அடிப்படையில் நாடாளுமன்ற தொகுதி மறுவரையறை செய்ய வேண்டாம் என வலியுறுத்தி வருகிறோம்.

மணிப்பூர் மாநிலத்தில் ஏற்பட்ட பிரச்சனைகளில் கூட அங்கு பிரதமரை பார்க்க முடியவில்லை. ஏனென்றால் அந்த மாநிலத்தில் 2 எம்.பி.க்கள் மட்டும் தான். அதனால் பா.ஜ.க அரசால் கைவிடப்பட்டு புறக்கணிக்க ப்பட்டது. எம்.பி.க்கள் எண்ணிக்கை கூடுதலாக இருந்தால் அந்த மாநிலத்திற்காக பாராளுமன்றத்தில் சம்பந்தப்பட்ட எம்.பி.க்கள் குரல் கொடுப்பார்கள்.

தமிழ்நாட்டிற்காக 40 எம்.பி.க்கள் குரல் கொடுத்து வருகிறோம்.

25 ஆண்டுகள் கழித்து தொகுதி மறுவரையறை செய்யலாம் என்று தி.மு.க உள்ளிட்ட பல்வேறு மாநிலங்கள் வலியுறுத்து வருவதற்கு காரணம் என்னவென்றால் அது வரையில் இந்த மறுவரையறை பிரச்சனை இல்லாமல் நிம்மதியாக இருப்போம் என்பதற்காகத் தான்.

இதற்கிடையே நிருபர்கள் கேட்ட கேள்விக்கு அவர் பதில் அளிக்கையில், தமிழ்நாட்டு முதல் அமைச்சர் ஸ்டாலின், மன்னராட்சி முதல்வர் என்றும் 2026ல் தி.மு.கவுக்கும் த.வெ.கவுக்கும் தான் போட்டி என்று விஜய் கூறியுள்ளார் என்றதற்கு, கடந்த 4 ஆண்டுகளில் தேர்தல் வாக்கு உறுதிகளை முடிந்த அளவு நிறைவேற்றி மக்களுக்காக உறங்காமல் உழைத்து கொண்டு நல்ல முதல்வர் என்ற பெயரை கழகத் தலைவர்ஸ்டாலின் அவர்கள்பெற்றுள்ளார்.

அதனால் வருகின்ற 2026ல் தி.மு.க மீண்டும் ஆட்சியை பிடித்து கழகத் தலைவர் ஸ்டாலின் தான் முதல்அமைச்சர் ஆவார். எப்படி என்றால் தி.மு.கவிற்கு 35% வாக்கு வங்கி உள்ளது. மற்ற கட்சியினருக்கு 25 சதவீதம் வாக்கு வங்கி உள்ளது. மீதமுள்ள 40% மக்கள் நடுநிலையாக வெற்றி பெறக்கூடிய கூட்டணி கட்சிக ளுக்கு ஆதரவளிப்பவர்கள். அதனால் அந்த நடுநிலையாளர்களும் தி.மு.கவை தான் ஆதரளிப்பார் கள்.

தமிழகத்தில் இருந்து ஜி.எஸ்.டி உள்ளிட்ட வரியினங்கள் மூலம் மத்திய அரசு ரூ.100 எடுத்துச் சென்றால் அதில் ரூ.29 தான் மாநில அரசுக்கு திருப்பி தருகிறது.

ஆனால் மற்ற மாநிலங்களில் ரூ.100க்கு ரூ.425 திருப்பித் தருகிறது. இதில் பீகார் மாநிலத்திற்கு ரூ.100க்கு ரூ.922 மத்திய அரசு திருப்பி தருகிறது.

அதுபோல தமிழகத்தில் 100 நாள் வேலை திட்டத்திற்கு கடந்த 6 மாதமாக சுமார் ரூ.4,000 கோடியை மத்திய அரசு நிலுவையில் நிறுத்தி வைத்துள்ளது.

தமிழகத்திற்கு அளிக்கப்படும் அநீதிகளை கண்டித்து 40 எம்.பி.க்களும் ஒரு நாள் நாடாளுமன்றத்தையே முடக்கி போராட்டம் நடத்தினோம். ஆனால் நாங்கள் நாடாளுமன்றத்தில் போராடப்படும், எழுப்பப்படும் கேள்விகள் மறைக்கப்படுகிறது. ஒன்றிய பா.ஜ.க அரசசை கண்டித்து தி.மு.க போராடுவது குறித்து பாமர மக்கள் கூட தற்போது புரிந்து கொண்டிருக்கிறார்கள்.

தி.மு.க ஆட்சிக்கு வந்தவுடன் நீட் தேர்விற்கு தடை என்று முதல் கையெழுத்து போடப்படும் என்ற கேள்விக்கு, நீட் தேர்வு தடை குறித்து நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பி உள்ளோம். பதில் இல்லை. விருப்பமுள்ள மாநிலங்களுக்கு மட்டும் நீட் தேர்வு வைத்து கொள்ளவும் மற்ற மாநிலங்களுக்கு வேறு தேர்வு முறைகள் மூலம் மாணவர்களை தேர்ச்சி பெற செய்து மருத்துவ படிப்பிற்கான சேர்க்கையை தொடங்குவதற்கான வழிமுறை ஏற்படுத்திக் கொள்ளலாம்.

அதுபோல ஓட்டுக்கு பணம் பெறுபவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமா என்று எழுப்பிய கேள்விக்கு 100 சதவீதம் ஓட்டுக்கு பணம் பெரும் மக்கள் மீது நடவடிக்கை எடுப்பதை தி.மு.க வரவேற்கிறது.

த.வெ.க இப்தார் நோன்பில் பங்கேற்பது, கேக் வெட்டி கொண்டாடுவது போன்றவற்றினால் சிறுபான்மையினர் ஓட்டை பிரிக்க நடவடிக்கை எடுத்து வருகிறதா என்ற கேள்விக்கு, ஒரு கட்சி, ஒரு இயக்கத்தை நடத்துவது என்பது மிகவும் சிரமம். ஆனால் சிலர் காலிகுடங்களுடன் நடந்து செல்கிறார்கள். ஆனால் தி.மு.கவின் தலைவரோ எண்ணெய் நிறைய உள்ள குடத்தினை சுமந்து கொண்டு சிந்தாமல், சிதறாமல் நல்லாட்சி நடத்திக் கொண்டிருக்கிறார்.

அதுபோல வைகை அணையை தூர்வாருவதற்கு சுமார் ரூ.450 கோடி வரை செலவாகும் என்பதால் அணை நீர் பிடிப்பு பகுதியில் புதிய அணையை ரூ.500 கோடியில் அமைப்பதற்கான புதிய திட்டம் தயாரிக்கப்பட்டு வருகிறது.

இவ்வாறு தங்க தமிழ்ச்செல்வன் எம்.பி., கூறினார்.

### தமிழ்நாட்டில் உள்ள அனைத்து விமான நிலையங்களின்

# நிலுவையில் உள்ள பணிகளை விரைவுபடுத்த தாமதம் ஏன்?

## ஒன்றிய அமைச்சரிடம் - வேலூர் மக்களவைத் தொகுதி எம்.பி. கதிர் ஆனந்த் கேள்வி!

**புதுடெல்லி, ஏப். 1-**

**தமிழ்நாட்டில் உள்ள அனைத்து விமான நிலையங்களின் நிலுவையில் உள்ள பணிகளை விரைவுபடுத்த ஒன்றிய அரசுக்கு ஏதேனும் கோரிக்கை வந்துள்ளதா? அப்படியானால் அதன் விவரங்கள் என்னவென்று மக்கள வையில் கழக உறுப்பினர் கதிர் ஆனந்த் எம்.பி. கேள்வி எழுப்பினார்.**

இது குறித்து அவர் பேசியதாவது: -

நிலுவையில் உள்ள பணிகளை முடிப்பதில் ஏற்பட்ட மிகையான தாமதத்திற்கான காரணங்கள் சென்னை, கோயம்புத்தூர், மதுரை, திருச்சிராப்பள்ளி மற்றும் தூத்துக்குடி விமான நிலையங்களில் நிலுவையில் உள்ள பணிகளை விரைவுபடுத்த ஒன்றிய அரசு எடுத்த நடவடிக்கைகள் மற்றும் வேலூர் மற்றும் நெய்வேலி விமான நிலையங்கள் எத்தனை ஆண்டுகளுக்குள் முடிக்கப்பட்டு செயல்பாட்டுக்கு வரும்?

பதில்



ஒன்றிய அரசின் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சகத்தின் ராஜாங்க அமைச்சர் முரளிதர் மொஹோல் எழுத்து பூர்வமாக அளித்த பதில் விவரம்

தமிழ்நாட்டில் இந்திய விமான நிலைய ஆணையம் (AAI) பல்வேறு விமான நிலைய மேம்பாட்டுத் திட்டங்களை மேற்கொண்டுள்ளது. இதில் சென்னை விமான நிலையத்தை நவீனமயமாக்குதல் ஓடுபாதையின் தெற்குப் பகுதியில் செயல்பாட்டுப் பகுதியை தரப்படுத்துதல் மற்றும் மதுரை விமான நிலையத்தில் வடிகால் அமைப்பு அமைத்தல் திருச்சிராப்பள்ளி விமான நிலையத்தில் ATC கோபுரம் மற்றும் தொழில்நுட்பத் தொகுதி கட்டுதல் மற்றும் தூத்துக்குடி விமான நிலையத்தில் ஓடுபாதை நீட்டிப்பு மற்றும் அதனுடன் தொடர்புடைய பணிகள் உள்ளிட்ட புதிய முனையக் கட்டிடத்தை உருவாக்குதல் ஆகியவை அடங்கும்.

விமான நிலையத் திட்டங்களுக்கான நிறைவு காலக்கெடு நிலம் கையகப்படுத்துதல் ஒழுங்குமுறை அனுமதிகள் தடைகளை நீக்குதல் மற்றும் அந்தந்த விமான நிலைய மேம்பாட்டாளர்களால் நிதி பயன்பாடு பணி நிறைவு உள்ளிட்ட பல காரணிகளைச் சார்ந்துள்ளது.

சென்னை விமான நிலையத்தின் நவீனமயமாக்கல் முதன்மையாக COVID 19 தொற்றுநோய் பல புயல்கள் மற்றும் வழக்கத்திற்கு மாறாக அதிக மழைப்பொழிவு உள்ளிட்ட எதிர்பாராத இயற்கை பேரழிவுகளால் தாமதங்களைச் சந்தித்துள்ளது.

விமான நிலைய விரிவாக்கம் மற்றும் நவீனமயமாக்கல் திட்டங்களை சரியான நேரத்தில் செயல்படுத்துவதை உறுதி செய்வதற்காக சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சகத்தின் பல்வேறு மட்டங்களில் தொடர்புடைய பங்குதாரர்களுடன் ஒருங்கிணைந்து வழக்கமான கண்காணிப்பு நடத்தப்படுகிறது. தாமதங்களைக் குறைப்பதற்காக மேம்படுத்தல் பணிகளின் முன்னேற்றம் மற்றும் தடைகளை நீக்குதல் முறையாகக் கண்காணிக்கப்படுகின்றன.

நெய்வேலி மற்றும் வேலூர் விமான நிலையங்களில் மேம்பாட்டுப் பணிகள் நிறைவடைந்துள்ளன. இந்த விமான நிலையங்களின் செயல்பாட்டுக்கு ஒழுங்குமுறை ஒப்புதல்கள் உரிமம் செயல்பாட்டுத் தயார் நிலை போன்ற பல காரணிகள் தேவை. இவ்வாறு அமைச்சர் தனது பதிலில் கூறினார்.

### வக்ஃப் சட்டம்: தமிழ்நாடு அரசுக்கு நன்றி!

# மதவெறியுணர்வை மட்டுப்படுத்த மாநில அரசுகள் முயற்சிக்க வேண்டும்!

## தமிழ்நாடு ஜமா அத்துல் உலமா சபை வலியுறுத்தல்!

சென்னை, ஏப். 1-

தமிழ்நாடு ஜமாஅத்துல் உலமா சபை டாக்டர் அன்வர் பாதுஷாஹ் உலவி விடுத்துள்ள அறிக்கை வருமாறு: -

முஸ்லிம் சமுதாயத்தின் நலன்களுக்காக இறைப்பாதையில் அர்ப்பணம் செய்யப்பட்ட வக்ஃப் சொத்துகளை கபளீகரம் செய்திடும் கெடு நோக்கத்தோடு ஒன்றிய அரசு கொண்டுவரத் துடிக்கும் வக்ஃப் திருத்தச் சட்டத்தை திரும்பப் பெறக் கோரி தமிழ்நாடு சட்டமன்றத்தில் வரலாற்று சிறப்புமிகு தீர்மானத்தை 27.03.2025 அன்று தமிழ்நாடு அரசு நிறைவேற்றியிருப்பதை தமிழ்நாடு ஜமாஅத்துல் உலமா சபை மனந்திறந்து பாராட்டுகிறது; உளமார்ந்த நன்றியினைத் தெரிவிக்கிறது.

ஒன்றிய அரசில் அங்கம் வகிக்கும் அமைச்சர்களும் பா.ஜ.க.வின் நிர்வாகிகளும் அவ்வப்போது உமிழ்ந்து வருகின்ற மதவெறிக் கருத்துகள் சிறுபான்மை மக்களிடையே அச்சத்தையும் அவநம்பிக்கையையும் விதைத்து வரும் சூழலில் இதுபோன்ற தீர்மானங்கள் ஆறுதலும் நம்பிக்கையும் அளிக்கின்றன.

பா.ஜ.க. அல்லாத கட்சிகள் ஆளும் மாநிலங்கள் தமது சட்டமன்றங்களில் இதுபோன்ற தீர்மானங்களை இயற்றுவதோடு அரசியலமைப்புச் சட்டம் வழங்கியுள்ள அடிப்படை உரிமைகளுக்கு எதிரான இதுபோன்ற சட்டங்களை எங்கள் மாநிலங்களில் நாங்கள் செயல்படுத்தமாட்டோம் என்றும் அறிவிக்க வேண்டும். இதன் மூலம் ஒன்றிய அரசின் கட்டுக்கடங்காத மதவெறுப்புணர்வை அடக்க முயல வேண்டும். வேற்றுமையில் ஒற்றுமை என்ற பொன்னார்ந்த தத்துவத்தை தனது அடையாளமாகக் கொண்ட இந்தியாவை மதவெறியர்களின் ஆதிக்கத்திலிருந்து மீட்க வேண்டும்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



சிவகங்கை மாவட்டம் தேவகோட்டை வடக்கு ஒன்றிய கழகத்தின் சார்பில் பாவனகோட்டையில் கழக தலைவர் தளபதி அவர்கள் உத்தரவின் பேரில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி அளிப்பு திட்டத்திற்கு நிதி வழங்காத ஒன்றிய அரசைக் கண்டித்து ஒன்றிய செயலாளர் வே.பூபாலசிங்கம் தலைமையில் தேவகோட்டை நகர் கழக செயலாளர் பெரி.பாலாமுன்னிலையில் நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்தில் பொதுக்குழு உறுப்பினர் மதார்சேட் உட்பட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### த. மாசிலாமணி
### ஏப்ரல் 1 (2021)



**தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரின் பேச்சுகளால் ஈர்க்கப்பட்டு, இளமைப் பருவம் முதலே கழகப் பணியாற்ற தொடங்கியவர்.**

**தலைமைக் கழகப் பேச்சாளராகவும், மாநில தொண்டர் அணிச் செயலாளராகவும் பொறுப்பு வகித்தவர்.**

**சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் இவர் படித்தபோது, விபரீதமான – விரும்பத்தகாத – வேண்டாத ஒரு நிலைமை உருவாக்கப்பட்டு, அதன் விளைவாக ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டு சிறைவாசம் அனுபவித்தவர்.**

**1982ல் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், இவரது மணவிழாவினை நடத்தி வைத்தபோது “புரட்சிக் கவிஞர் வரிகளுக்கேற்ப சிறுத்தைக் கூட்டத்தில் உள்ள ஒரு சிறுத்தைதான் தம்பி மாசிலாமணி'' என்று பாராட்டினார்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**